# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்



# துன்பப்படுத்தியவன் பிரசங்கியானான்

எழுதியவர்: Edward Hughes
சித்தரிப்பவர்: Janie Forest
மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj
தழுவியவர்: Ruth Klassen

**கதைகள் 60 ல் 58**

**www.M1914.org**

***Bible for Children,*** *PO Box 3, Winnipeg, MB R3C 2G1 Canada*

உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

Tamil



ஆதித் திருச்சபையில் தேவன் தன்னுடைய ஜனங்கள் மூலமாக பெரிய காரியங்களைச் செய்துவந்தார்.

பிலிப்பு என்று பெயர் கொண்ட, ஒரு மனிதன், ஜனத்திரள் மிகுந்த ஒரு பட்டணத்தில் இயேசுவை பற்றி சொல்வதில் மிகவும் சுறுசுறுப்பாக இருந்தான்.

1



எத்தியோப்பியாவின் கந்தாகே மகா ராணியின் மந்திரி ஒருவன், வனப்பிரதேசம் வழியாய் பிரயாணம் பண்ணிக்கொண்டு இருக்கிறான் என்று தேவனுக்கு தெரியும்.

2


அவன் தன்னுடைய வீட்டிற்கு சென்று கொண்டிருந்த போது விசேஷித்த புஸ்தகம் ஒன்றை வாசித்துக்கொண்டிருந்தான். அது எந்த புஸ்தகமாக இருந்திருக்கலாம் என்று உங்களால் கற்பனை செய்து பார்க்கமுடியுமா?
3
பிலிப்பு தேவனுக்கு கீழ்ப்படிந்தபோது,
தேவனுடைய வார்த்தையை வாசித்தும் புரிந்துகொள்ளாமல் இருந்த அந்த மந்திரியினிடம், தேவன் அவனை நேராக வழி நடத்தினார்.
4
அவன் பிலிப்புவை தன்னுடன் சேர்ந்து கொள்ளும்படி அழைத்தான்.
5
"இதனுடைய அர்த்தம் என்ன?" என்று மந்திரி பிலிப்புவிடம் கேட்டான். அந்த ரதமானது வனாந்திர சாலை வழியில் அசைந்து செல்ல, பிலிப்பு தன் வாயைத் திறந்து, அந்த வசன வேத பகுதியிலே ஆரப்பித்து, இயேசுவைப்பற்றி அவனுக்குப் பிரசங்கம் பண்ணினான்.
6
இயேசு கிறிஸ்துவே
தேவனுடைய குமாரன் என்று, அந்த ஆப்பிரிக்க நாட்டு மந்திரி வேதாகமத்தின் செய்தியை வெகுவிரைவாக விசுவாசித்தான். அவன் தண்ணீரைக் கண்ட போது, அவன் சொன்னான், "நான் ஞானஸ்நானம் பெறுவதற்கு தடையென்ன இருக்கிறது?"
7
அப்பொழுது பிலிப்பு சொன்னான், "நீ முழு இருதயத்துடன் இயேசுவை விசுவாசித்தால் பெற்றுக்கொள்ளலாம்." அப்பொழுது மந்திரி சொன்ன பதில், "நான் இயேசு கிறிஸ்துவே தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன்," உடனே பிலிப்பு தண்ணீரண்டை எடுத்துச்சென்று
8



அவர்கள் தண்ணீரிலிருந்து வெளியே வந்த போது, ஆவியானவர் பிலிப்புவை அங்கேயிருந்து எடுத்துச்சென்று விட்டார், ஆப்பிரிக்கா மந்திரி அவனை அதன் பின் காணவில்லை. அவன் எத்தியோப்பாவிற்கு சந்தோஷத்துடன் திரும்பிச் சென்றான்.

9

ஆனால் சில ஜனங்கள் கிறிஸ்தவர்களை வெறுத்தார்கள். இயேசுவக்குறித்து பிலிப்புவின் நண்பன் ஸ்தேவான் பேசுவதை விரும்பாத மக்கள் மிகவும் கோபப்பட்டு அவனை கொலை செய்தார்கள். தர்சு பட்டணத்தை சேர்ந்த சவுல், ஸ்தேவான் கொலைசெய்யப்பட உதவி செய்தான். சவுல் கிறிஸ்தவர்களை முற்றிலுமாக வெறுத்தான்.



10

சவுல், கிறிஸ்தவர்களை பயமுறுத்தி கொலை செய்ய வகை தேடினதினால், பிரதான ஆசாரியனிடம் போய், இயேசுவை பின் பற்றுகிற ஆண்கள் மற்றும் பெண்களை கைது செய்ய, அதிகாரம் பெறும்படி கடிதங்களை வாங்கினான்.



11



தர்சு பட்டணத்து சவுல் பரிதாபமானவன்! அவன் தேவனுடைய பிள்ளைகளை புன்படுத்தும் போது அவன் உண்மையிலேயே ஆண்டவராகிய இயேசுவையே புண்படுத்துகிறான் என்கிற சத்தியத்தை அறியாமலிருந்தான். தேவன் சவுலை எப்படியாவது நிறுத்த வேண்டும். ஆனால் எப்படி?

12

தேவன் சவுலை "நிறுத்தினார்"! சவுல் தமஸ்கு பட்டணத்திற்கு போய் கொண்டிருக்கும் போது, தேவன் ஒரு பெரிய வெளிச்சத்தை பரலோகத்திலிருந்து காண்பித்தார். சவுல் தரையிலே கீழே விழுந்தான். பின்பு ஒரு சத்தத்தைக் கேட்டான்.



13



"ஆண்டவரே, நீர் யார்?" என்று சவுல் கூப்பிட்டான். "நீ துன்பப்படுத்துகிற இயேசு, நானே". பயத்துடனும் நடுக்கத்துடனும், சவுல் கேட்டான், "ஆண்டவரே நான் என்ன செய்ய வேண்டும்?" அதற்கு ஆண்டவர் சொன்னது, "நீ எழுந்து பட்டணத்திற்குள் போ, நீ என்ன செய்ய வேண்டுமென்பது அங்கே உனக்கு சொல்லப்படும்."



14


சவுலோடு இருந்த மற்ற மனிதர்களும் சத்தத்தைக் கேட்டார்கள், ஆனால் அவர்கள் யாரையும் காணவில்லை.
15


சவுல் தரையிலிருந்து எழுந்தான் - தான் குருடனாக இருப்பதை தெரிந்துகொண்டான்! அவனை தமஸ்குவுக்கு அழைத்து சென்றார்கள்.
16


அந்த பட்டணத்திலே, சவுல் பார்வையில்லதவனாய் புசியாமலும் குடியாமலும் மூன்று நாட்கள் இருந்தான். ஒரு வேளை அவன் தமஸ்கு வருகிற வேளையிலே தன்னை சந்தித்த ஆண்டவராகிய இயேசுவிடம் விண்ணப்பம் செய்து கொண்டிருந்திருக்கலாம்.
17


தேவன் எல்லாவற்றையும் சரியாக திட்டம் பண்ணி வைத்திருந்தார். அனனியா என்றழைக்கப்பட்ட சீஷன் ஒருவன் தமஸ்குவிலே இருந்தான். சவுலுக்கு உதவி செய்யும்படி தேவன் அவனை அனுப்பினார், அனனியா மிகவும் பயப்பட்டான்.
18


ஆனால் அவன் தேவனுக்கு கீழ்ப்படிந்தான். அவன் சவுலின் மேல் தன் கையை வைத்தபோது, குருட்டு தன்மை போயிற்று - மற்றும் சவுல் தேவனுடைய பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டான்.
19


சவுல் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டான். பின்பு அவன் சாப்பிட்டான். அவன் உணவு அருந்திய போது, அவனுக்குள்ளாக பெலன் வந்தது. சவுலுக்கு பெலன் தேவைப்பட்டது. அவன் செய்ய வேண்டிய பல முக்கியமான காரியங்கள் இருந்தன.
20













துன்பப்படுத்தியவன் பிரசங்கியானான்

## தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்திலிருந்து ஒரு கதை

## காணப்படுமிடம்

அப்போஸ்தலர் 8-9

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

நாம் தவறுதல்களை செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அதை அவர் பாவம் என்று அழைக்கிறார். பாவத்திற்கு தண்டனை மரணமாகும்.

தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பி, நம்முடைய தண்டனையை அவர் ஏற்றுக் கொண்டு, நமக்காக சிலுவையில் மரணமடையச் செய்தார். இயேசு உயிரோடு வந்து, திரும்பவும் பரலோகத்திற்கு சென்றார். இப்போது தேவனாலே நம்முடைய பாவங்களை மன்னிக்க முடியும்.

உங்களுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப விரும்பினால், இந்த வாக்கியங்களை தேவனிடம் சொல்லுங்கள்: பிரியமுள்ள தேவனே இயேசுவே என்னுடைய வாழ்க்கைக்குள் வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதன் மூலம் நான் புதிய வாழ்வை இன்று பெற்று, உம்மோடு எப்போதும் இருக்க உதவி செய்யும். நான் உம்முடைய பிள்ளையாக வாழ உதவி செய்யும். ஆமென்.
யோவான் 3:16

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து, தேவனுடன் பேசவும்.